60
A 60

இறைவன் துணை.

பிஸ்மில்லாஹிர் ரஹுமானிர் ரஹீம்

OFFICE OF THE REGISTRAR
4 OCT 1933
MADRAS

# சங்கீதரத்ன பக்திரசக் கீர்த்தனை

## முதற்பாகம்.

இஃது

நமது நாயகம் முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு
அலைகிவசல்லம் அவர்கள் பௌத்திரர்
நாகூர்
சாகுல் ஹமீதாண்டகை அவர்கள் பெயரால்
முகவைப்பதியைச் சார்ந்த
பாம்பன்
செ. கா. செய்யது முகம்மது ராவுத்தர்
அவர்களால் பாடப்பெற்று,

S. M. N. முகம்மது முஸ்தபா மரைக்காயர்
அவர்கள் நன்முயற்சியால்,
தூத்துக்குடி,
...ரகாசம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1933.

விலை அரை அணா.

O7:417
N33
120338.

1

OFFICE OF THE REGIST...
4 OCT 1933
MADRAS

பிஸ்மில்லாஹிற் றகுமானிற்றஹீம்

இறைவன் றுணை.

# சங்கீத ரத்ன பக்திரசக் கீர்த்தனம்.

## முதற்பாகம்.

காப்பு வெண்பா.

ஆதியிறை ஜோதிதிரு அகுமதரின் பேரரென
பூதலமெ லாம்புகழும் புண்ணியராய்—எதுவுடன்
நாகூரில் வந்தமர்ந்த சாகுல்ஹமீ தொலிமேல்
பாகூரப் பாலகனே காப்பு.

---

தூயமெய்ஞானமணி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நாயகமே நாகைவளர் தாயகமே மாயிகமே (நாயகமே)

அநுபல்லவி எடுப்பு.

தூயமீரசவொலியே—ஜோதிகாதிரே புலியே
காயகற்பகநிதியே—காத்தருள்வீர் பதியே (நாயகமே)
ஆதியிறைதூதரான—மேதகைநபிபேரரே
பாதந்தந்தருள்வீர்நீரே—பாக்கிய ஸிலாக்கியரே (நாயகமே)

மன்னன் தஞ்சை மாபதியான்
மாதுய ரகற்றினோரே

சென்னை-600 008
170338



மன்னியதவத்தோர் போற்றும்
மாண்புமிக்க வாண்டகையே (நாயகமே)

புனல்விளையாடவந்த
பூவைகொங்கை காட்டவந்த
தனம் மறைத்தீர்வருந்தத்
தானருள் கொடுத்திர் முந்த (நாயகமே)

பக்தர்கள் கோடானுகோடி
பாதம்பணிவார் கொண்டாடி
நித்தியானந்தத்தைத் தேடி
சேமிவந்து கூடிப்பாடி (நாயகமே)

வையகம் திகழும் தேவே
செய்யதுமுகம்மது பாவே
கைபணைத்துக் காருங்கோவே
காட்சி மாட்சி யாகப்பூவே (நாயகமே)

1996
784.0954

திருவாசனப்பதியிது தானே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

திருநாகைப் பதியின்கோமானே சீமானே (திருநா)

அநுபல்லவி.

திருவே மருவே குருவே
வருவீரருள் தருவீர்—தரணியில் (திருநா)

Q7:417
1438

சரணங்கள்.

அன்னை தந்தை நீரே—ஆதரிப்பீர் பாரே
கன்னல்மொழிபாத்தி—மாநந்த பாலரே
இன்னலகற்றி யெனையாண்டருள்வீரே
இதயத்தருளும் மதியே
அதியற்புதவா ருதியே—கதியே (திருநா)

தாலமீது தக்கவன்—தன்ஜோதியே
சாற்றும் வெம்பிணி—போக்குவீர் நாடியே
பாலன்செய்யது முகம்மது பாடிய
பதியஞ்சலி துதிமஞ்சரி
திதியக்தகை கதிவந்தருள் (திருநா)

---

மாதாடப் பாராதேனெ என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சாகுல் ஹமீதொலியே
தஞ்சம் புலியே (சாகுல்)

அநுபல்லவி தொடர்.

சாகரம் சூழ்புவியில் நாகூர் நகரில் வந்து
வாசுடனையமர்ந்த வள்ளல்யோகமெய்ஞான (சாகுல்)
நாதநாதாக்கள் கோடி நாடிவருவார் கூடி
பாதாரவிந்தம்தேடிப் பாடித்துதித்தேதன் நாடி (சாகுல்)
தண்முகிற் குடைதரும் அண்ணல்நபிபோலே
கண்மணி பாத்திமாவின் ஹஸ்புக்கனியானோரே (சாகுல்)

செய்யது முகம்மது செப்புஞ் செந்தமிழிது
துய்யநல்லருள்பாது காத்தருள்வீர்பூமீது (சாகுல்)

---

நாளே மன்ருடிக் காப்பவர்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

நாகை நகர்பதியே
நாளும் துதியே (நாகை)

அநுபல்லவி

நாகூர் நகரில் வளர்—நாதா மீரான் ஒலியே
சாகுல் ஹமீதொலியே—தஞ்சம் புவியே (நாகை)

தொகையறு

தஞ்சையரசன் பிணியைத் தாம் புனித மாக்கியவன்
சஞ்சல மகற்றி வைத்தீர்
வஞ்சியிரு கொங்கைவய மாற்றியவள் நெஞ்சினில்
மறுபடித் தோன்றவைத்தீர்

பாட்டு

தாரணி தனிலே—தனியவன் பொருளே
காரணக்கடல் வள்ளலே—கருணை செய்வீர் (நாகை)

தொகையறு

மக்கமா நகர் வந்த முகம்மதி ரசூல் தந்த
மன்னரே பாதம் போற்றி

சென்னை-600 0

இறக்கனருள் பெற்றுவளர் காதிரொலி நாயகமே
கைகூப்பி நின்றேன் சாற்றி

பாட்டு

துதிசெய்யது முகம் மது தண்டமிழ்பதம்
ததிபிது தயைகூறுவீர்—தாலம் புகழும் (நாகை)

---

ஆரணம் முழங்கும்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

காரணம் விளங்கும் நாகூர் காதிரே மீரா
காதிரே மீரா அப்துல் காதிரே மீரா (கார)

அநுபல்லவி யெடுப்பு

தாரணி புகழ் கெம்பீரா
சற்சனர் போற்றும் ஒய்யாரா
வாரணக் கரையமர்ந்த வள்ளலே சீரா
வள்ளலே சீரா ரசூ லுல்லாவின் பேரா (கார

பல்வினை யகற்றும் நாதா
பாலர்கள் போற்றும் தாதா
தொல்லுலகில் அல்லல் நீக்கும் சோபித வேதா
சோபித வேதா துய்ய வினருள் போதா (கார)

வங்கம் வாருதி நடுவில்
சங்கடங்கண்டீர் படியில்

அங்஘ன்செங்கைகண்ணுடியால் ஆட்கொண்டீர்நொடியில்
ஆட்கொண்டீர் நொடியில் தாட்டகத்துடன் புவியில் ()

தஞ்சம் தாஹா செஞ்சரணம்
மிஞ்சு புகழ் நஞ்சரணம்
அஞ்சலி செய்பது முகம்மதுக் கருளிது கருணம்
அருளிது கருணம் அதிபதிகதி சரணம் (கா)

---

சிங்கார நந்தவனமே—என்ற வர்ண மெட்டு.

பல்லவி

திருநபி திருப்பேபரரே—எ

அநுபல்லவி

தருவீரருள்வீர் கொஞ்சம்
வருவீர் தரணி தஞ்சம் (திருநபி)

சரணங்கள்

கருணை புரிவோர் யாரே காதிரொளி யெம்பீரே
சரணம் நம்பினேன் பாரே சாதல் ஹமீதென்போரே
சந்ததியானே—வந்தித்தேன் தானே
சந்ததமுந்துதிக்க சிந்தையில் வந்துதிக்க (திருநபி)

பக்தாசன் குத்தாசின் புத்ரசிகாமணியே
சுத்துமடியவர்க்கு நல்லருள் செய்கனியே
நாடினேனே—தினம் பாடி நானே
தேடும் பயந்கருள்கை கூடும் கை கூடும்படி (திருநபி)

7 178338

மீரா ஒலியெனவும் பாரோர்துதி பெ[illegible]
பேரேயப்துல்காதிரே பேரோபிரபல்யரே
பேணிக்காரும் கண்காணித்துவாரும்
பிதுர் செய்யதுமுகம் மதுதுதிமதிகூறும் (கிருபை)

---

97:417 N3

கலிவிருத்தம்.

தாதையே நின்னையன்றித் தாரணியில் தஞ்சமில்லை
மேதையாயுலவிவர மீகாநற்சகமுமில்லை
வாதையாயுலகுலவ வாஞ்சையோ சற்றுமில்லை
ஏதுவாயருள்புரிவீர் எம்பிறகூல் பேரர் நீரே.

முதற்பாகம் முற்றுபெற்றது.

இரண்டாம் பாகம் அதிவிரைவில் வெளிவரும்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

எதிர்பாருங்கள்!

சுபம். சுபம். சுபம்.

—(:)—

வாருங்கள், சரக்கைப் பாருங்கள்,
வாங்குங்கள், களிகூருங்கள்.

இலாஹி

# கறார் விலை! புதிய ஜவுளிகள்!!

## S. M. Noor Mohamed Maraicayer Sons,

### Fancy Cloth & General Merchants, PAMBAN.

---

எமது கம்பெனியில் தற்சமயம் சகலவித பட்டு, கம்பளி, நூல் ஜவுளி திணுசுகளும், பர், வில்வட்டு, சில்க்கு, தொப்பி ரகங்களும், ஷாப்புசாமான்களும் தேயிலை திணுசுகளும் ரகவாரியாக வந்திருக்கிறது, விலை சகாயப்படுத்தி விட்டோம். சகல மதஸ்தர்களுக்குமுரிய ஜவுளிகள் சகாயமாய்க் கிடைக்கும்.

**ஒரே விலை;** தேவையுள்ளோர் எமது கம்பெனியில் ஒரு முறை ஜவுளி திணுசுகள் வாங்கிப் பார்க்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கம்பம் ஹமீதியா டீ சோல் ஏஜண்ட்ஸ்

**சீ. மு. நூரு முகம்மது மரைக்காயர் சன்ஸ்,**

பேன்ஸி ஜவுளி, ஷாப்பு வர்த்தகம், **பாம்பன்,**

இராமநாதபுரம் ஜில்லா.

மானேஜிங் புரோப்ரைட்டர்:—

**S. M. N. முகம்மது முஸ்தபா மரைக்காயர்.**